# புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
## தொல்லியல் திணைக்களம்

# வெற்றிட அறிவித்தல்

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள தொல்லியல் திணைக்களத்தின் வெற்றிடமாகவுள்ள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பதவியின் பெயர் | தொல்லியல் பணிப்பாளர் நாயகம் |
| சேவைக் காலம் | நியமனம் வழங்கப்படும் நாள் முதல் இரண்டு (02) வருடங்கள் |
| சம்பள அளவு | 88000 - 12x2700 - 120400<br>3/2016ஆம் இலக்க (அர. நி. சுற்றறிக்கை - SL 03-2016 பிரகாரம்) |
| வயதெல்லை | 55 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும் |

**கல்வித் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்:**

01. (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொல்லியல் (விசேடமாணி) / உரிமை முகாமைத்துவ ஆரம்பப் பட்டம் சகிதம் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம் அல்லது பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் இருபது (20) அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) மேற்கூறப்பட்ட பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது பல்கலைக்கழகமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சிறப்பு சேவை பதிவைக் கொண்ட உத்தியோகத்தராக அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பதாரர் பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான சிறந்த உள மற்றும் உடல் தகுதியைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கப்படும் முறை**

- முன்வரும் விண்ணப்பதாரர்களிடையே பொருத்தமான ஒருவர் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவார்.

**ஏனையவை**

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு தொல்லியல் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இயைபாக அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள் பதவி வகிக்கும் காலப்பகுதியில் வழங்கப்படும்.
- அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது பல்கலைக்கழகத்தில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்துடன் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக தமது நிறுவன தலைவரின் இணக்கப்பாட்டை உள்ளடக்கிய கடிதம் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன்பொருட்டு முன்வரும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தம்மால் சுயமாகத் தயாரித்துக்கொண்ட சுய தரவுப் படிவத்துடன் தமது தகைமைகளை உறுதி செய்வதற்காக சமர்ப்பிக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் 2023-12-12ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இல. 135, அனகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு-07'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.


செயலாளர்,
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,
இல. 135, அனகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு-07